போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு



காந்தி ஜெயந்தி விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கிய மக்கள் நல மன்றத் தலைவர் ஜி. அய்யல்ராஜ். உடன் விளையாட்டுக் குழுத் தலைவர் ஜி. ராஜகோபால், மாமன்ற உறுப்பினர்கள் விஜயா, கி. இந்திராகாந்தி உள்ளிட்டோர்.

திருப்பரங்குன்றம், அக். 9: திருப்பரங்குன்றத்தை அடுத்தஹார்விபட்டியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு புதன்கிழமை பரிசுகள் வழங்கப்பட்டன.

ஹார்விபட்டியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, கே.பி. அனைத்து விளையாட்டுக் குழு சார்பில் 12-ஆம் ஆண்டு பேச்சுப் போட்டி,விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதற்கு ஸ்ரீமான் எஸ்.ஆர்.வி. மக்கள் நல மன்றத் தலைவர் ஜி.அய்யல்ராஜ் தலைமை வகித்தார். வழக்குரைஞர் ரா.சந்தானகிருஷ்ணன் முன்னிலையில் விடுதலை வேள்வியில் வ.உ.சி. எனும் தலைப்பில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெற்றது. இதேபோல, கட்டுரை, ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், 10, 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

பரிசளிப்பு விழாவில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை ஏ.கீதா ராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் விஜயா, கி.இந்திரா காந்தி, மதுரை தொழிலாளர் பள்ளித் தலைமை ஆசிரியர் எம்.முத்துசெல்வம், ஹார்வி மக்கள் நல மையத் தலைவர் கே.செல்வராஜ், எஸ்.அன்புச்செல்வி, ஜி.காளிதாசன், பி.செல்வரெங்கராஜ் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்திப் பேசினர்.

சிறந்த சமூக சேவைக்காக ஏணி அமைப்பின் தலைவர் ப.மீனாட்சிசுந்தரம், சமூக ஆர்வலர் ஸ்ரீராம், ஹார்விபட்டி அ.அரவிந்தன் ஆகியோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை விளையாட்டு குழுத் தலைவர் ஜி.ராஜகோபால், பொருளாளர் கே.முத்துராஜ், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் என்.ரவிச்சந்திரன், எஸ்.நாகராஜ், எஸ்.அசோக், ஆர்.ரஞ்சித் குமார் உள்ளிட்டோர் செய்தனர்.

முன்னதாக, விளையாட்டு குழுச் செயலர் பா.பாஸ்கர் பாண்டி வரவேற்றார்.

மதுரை மாவட்டத்தில் பலத்த மழை

மதுரை, அக். 9: மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

கன்னியாகுமரிக் கடல் பகுதியிலிருந்து வடக்கு உள் கர்நாடக மாநிலப் பகுதிகள் வரை தமிழகம், தெற்கு உள் கர்நாடகம் வழியாக காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால் மதுரை உள்பட 10-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

இதன்படி, மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. மாட்டுத்தாவணி, கோ.புதூர், தல்லாகுளம், அண்ணாநகர், கோரிப்பாளையம், சிம்மக்கல், பெரியார் பேருந்து நிலையம், கீழவாசல், அவனியாபுரம், பழங்காநத்தம், திருப்பரங்குன்றம், தனக்கன்குளம், யா.ஒத்தக்கடை, நரசிங்கம் உள்ளிட்ட பகுதிகளில் மாலை 6.55 மணி அளவில் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை 7.45 மணி வரை பலத்த மழையாக பெய்தது. பின்னர், சில நிமிஷங்களுக்கு சாரல் மழை நீடித்தது.



மதுரை பெரியார் பேருந்து நிலையம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு சாலையில் தேங்கி நின்ற மழை நீரைக் கடந்து சென்ற வாகனங்கள்.

இதனால், மதுரை ரயில் நிலையச் சாலை, சிம்மக்கல், தவிட்டுச் சந்தை, தல்லாகுளம், பெரியார் பேருந்து நிலையம் உள்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள முதன்மைச் சாலைகளில் மழை நீர் தேங்கி நின்றது. தனக்கன்குளம், நேதாஜி நகர் உள்ளிட்ட சில பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கிய அடுத்த சில நிமிடங்களில் மின் வெட்டு ஏற்பட்டது. இந்த மின் வெட்டு சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது.

முன்னதாக, வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் உசிலம்பட்டி முதல் எழுமலை வரை சுமார் 30 நிமிஷங்கள் பலத்த மழை பெய்தது.

காந்திய சிந்தனைப் படிப்பு மாணவர்களுக்கு பரிசளிப்பு

மதுரை, அக். 9: காந்தி நினைவு அருங்காட்சியக வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, காந்திய சிந்தனைக் கல்லூரி சார்பில், 157-ஆவது காந்தி ஜெயந்தி விழா, பரிசளிப்பு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு, காந்திய சிந்தனைக் கல்லூரி இயக்குநர் சு. ஆண்டியப்பன் தலைமை வகித்தார். தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் செயலர் எஸ்.டி.ராஜேந்திரன், காந்திய சிந்தனை சான்றிதழ், பட்டயப் படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளைப் பாராட்டி பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கினார்.

காந்திய சிந்தனை சான்றிதழ் படிப்பில் 2025-2026 கல்வியாண்டில், அதிக மாணவர்களை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தேர்வில் பங்கேற்க வைத்த காந்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்துக்கு சுழல் கேடயம் வழங்கப்பட்டது. இதை அந்த நிறுவனத்தின் முதல்வர் ஆர்.தேவதாஸ் பெற்றுக் கொண்டார்.

இதேபோல, காந்திய சிந்தனை பட்டயப் படிப்பில் அதிக மாணவர்களை பல்கலைக்கழகத் தேர்வில் பங்கேற்கச் செய்த யாதவா கல்லூரியின் பேராசிரியை சுதாவுக்கும் சுழல் கேடயம் வழங்கப் பட்டது.

இந்த விழாவில், கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள்,ஊழியர்கள்கலந்துகொண்டனர். முன்னதாக, கல்லூரியின் முதல்வர் ச.சேது ராக்காயி வரவேற்றார். பேராசிரியர் அனார்க்கலி நன்றி கூறினார். கல்லூரியின் முன்னாள் முதல்வர் சு.முத்துலட்சுமி, ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி ச.மீனாட்சிசுந்தரம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

திருமங்கலம் அருகே புகையிலைப் பொருள்கள் விற்ற மூதாட்டி கைது

திருப்பரங்குன்றம், அக். 9: திருமங்கலம் அருகே அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்ற மூதாட்டியை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்து 18 கிலோ புகையிலைப் பொருள்களைப் பறிமுதல் செய்தனர்.

திருமங்கலத்தை அடுத்த உச்சப்பட்டி சிவன்நகர் பகுதியில் ஆஸ்டின்பட்டி காவல் உதவி ஆய்வாளர் கண்ணன் தலைமையிலான காவல் துறையினர் வெள்ளிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, முனியாண்டி கோயில் அருகேயுள்ள தெருவில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களைப் பதுக்கி வைத்து விற்பனை செய்வதாகத் தகவல் கிடைத்தது.

காவல்துறையினர் அங்கு சென்று பார்த்தபோது, புகையிலைப் பொருள்களை விற்பனை செய்து கொண்டிருந்த உச்சப்பட்டி சிவன்நகரைச் சேர்ந்த மாயாண்டியின் மனைவி ஜோதியை (66) கைது செய்தனர்.

அவரிடமிருந்து ரூ. 13,626 மதிப்பிலான 18.751 கிலோ புகையிலைப் பொருள்களைக் காவல்துறையினர் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

'டெட்' தகுதித் தேர்வு: ஆசிரியர்களுக்கு உண்மைத் தன்மை சான்றிதழ் வழங்கக் கோரிக்கை

மதுரை, அக். 9: ஆசிரியர் தகுதித் தேர்வில் (டெட்) தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உண்மைத் தன்மை சான்றிதழ் வழங்க தமிழக பள்ளிக் கல்வித் துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரியர் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது.

ஆசிரியராகப் பணியில் தொடரவும், பதவி உயர்வு பெறவும் ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயம் என்று கடந்த ஆண்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதைத்தொடர்ந்து, தமிழகத்தில் 2025, நவ.15, 16 ஆகிய தேதிகளில் நடந்த ஆசிரியர் தகுதித் தேர்வை பணியிலுள்ள ஆசிரியர்கள் உள்பட சுமார் 4.24 லட்சம் பேர் எழுதினர். இந்தத் தேர்வுக்கான முடிவுகள் கடந்த ஜன. 30-ஆம் தேதி வெளியானதில், தாள்-1, தாள்-2ஐ சேர்த்து மொத்தம் 1,50,703 பேர் தேர்ச்சி பெற்றனர்.

இவர்களில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் பணியாற்றும் ஆசிரியர்களும் அடங்குவர். தேர்ச்சி பெற்ற வர்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் இணையதளத்தில் மின்னணு சான்றிதழ் (இ-சர்ட்டிபிகேட்) வழங்கப்பட்டாலும், பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு அந்த சான்றிதழை பணிப் பதிவேட்டில் பதிவு செய்ய மாவட்டக் கல்வி அலுவலகம் சார்பில் வழங்க வேண்டிய உண்மைத் தன்மை சான்றிதழ் இதுவரை வழங்கப்படவில்லை.

குறிப்பாக, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், தேர்ச்சி பெற்ற உடனேயே தங்களது பள்ளிச் செயலர் வழியாக மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் சான்றிதழ் கோரி விண்ணப்பித்து 8 மாதங்களாகியும் இதுவரை கிடைக்காததால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.சிவஞானம் தெரிவித்ததாவது:

அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு பணிப் பதிவேட்டில் டெட் தேர்வு தேர்ச்சி பதிவு செய்யப்படாததால் ஊதிய உயர்வு நிறுத்தம், 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய பணி அனுபவ தேர்வுநிலை மறுக்கப்படுகிறது. மேலும், பதவி உயர்வு, பணப்பலன்கள் முழுமையாகப் பாதித்துள்ளது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி பணியில் நீடிக்க டெட் தேர்வு கட்டாயம் என்ற நிலையில், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை ஊக்குவிக்க வேண்டிய பள்ளிக் கல்வித் துறை, சான்றிதழ் சரிபார்ப்பை கிடப்பில் போட்டுள்ளதாக ஆசிரியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். எனவே, தமிழக பள்ளிக் கல்வித்துறை உடனடியாக தலையிட்டு, உண்மைத் தன்மை சான்றிதழை விரைந்து வழங்க வேண்டும் என்றார் அவர்.

வேனில் வெளிமாநில மதுப் புட்டிகள் கடத்தல்: ஐவர் கைது

மதுரை, அக். 9: வேனில் வெளிமாநில மதுப் புட்டிகளை கடத்தி வந்த ஐவரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

மதுரை எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்துக்குள்பட்ட தேனி முதன்மைச் சாலையில் போலீஸார் வெள்ளிக்கிழமை வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த வேனை மறித்து சோதனை செய்த போது அதன் ஓட்டுநர் உள்ளிட்டோர் முன்னுக்குப்பின் முரணாகப் பதிலளித்தனர்.

தொடர் விசாரணையில், மதுரை மாவட்டம், நடுமுதலைக்குளத்தைச் சேர்ந்த செல்வம் மகன் முத்துவீரன் (37), அதே பகுதியைச் சேர்ந்த கருப்பையா மகன் கவி மன்னன் (27), மதிவாணன் மகன் பிரேம் (33), நாகமலைப்புதுக்கோட்டையைச் சேர்ந்த முருகன் மகன் பிரசாத் (42), உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த செல்வம் மகன் சந்துரு (26) ஆகியோர் வெளிமாநில மதுப் புட்டிகளைக் கடத்தியது தெரியவந்தது.

இதையடுத்து, எஸ்.எஸ். காலனி போலீஸார் வழக்குப் பதிந்து முத்துவீரன், கவிமன்னன், பிரேம், பிரசாத், சந்துரு ஆகிய ஐவரைக் கைது செய்து, அவர்களிடமிருந்த 484 வெளிமாநில மதுப் புட்டிகளைப் பறிமுதல் செய்தனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பொது

மூத்த தமிழறிஞர் சாலமன் பாப்பையாவுக்கு அஞ்சலி, நூல்கள் வெளியீட்டு விழா: தலைமை – சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ், கலைஞர் நூற்றாண்டு நூலக அரங்கம், மாலை 5.30.

உலக மனநல தின விழா: சிறப்பு விருந்தினர் – மதுரை தெற்குத் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.எம்.கோபிசன், ஜே.சி. தங்கும் விடுதி, காலை 10.

ஆன்மிகம்

ஆன்மிக இலக்கியச் சொற்பொழிவு: தலைப்பு– தாயுமானவர், உரையாற்றுபவர்– சுந்தர.கண்ணன், திருவள்ளுவர் கழகம், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் வடக்காடி வீதி, இரவு 7.

கொசு ஒழிப்பு...



மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் வெள்ளிக்கிழமை டெங்கு கொசு ஒழிப்புப் பணியில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்.

மேதகு கடன் மீட்பு தீர்ப்பாயம், மதுரை
O.A. No.336 of 2026
M/s. கஸ்தூர் வைசியா வங்கி, சொத்து மீட்பு கினை, எண்.170/9, உத்தங்குடி கிராமம், மாட்டுத்தாவணி ஆம்னி பேருந்து நிலையம் அருகில், மதுரை – 625 107, வங்கிக்காக அதன் தலைமை மேலாளர். ... வாதி
எதிர்
M/s. பிராண்ட் அம்கிள், அதன் உரிமையாளர் திருமதி. வித்யா நாகராஜன், எண்.14, வைத்தியநாதபுரம் கிழக்கு தெரு, மதுரை – 625 016. ... 1-ம் பிரதிவாதி
மேற்படி மேதகு தீர்ப்பாயத்தின் உத்தரவின் பேரில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது
மேற்படி மனுதாரர், வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகையை பின்வட்டி செலவு தொகையுடன் வசூலிக்கும் பொருட்டு மேற்படி வாதி, வங்கியினால் தாக்கல் செய்த நிலுவையில் இருந்து வரும் மேற்படி வழக்கில் தாங்கள் மேற்படி தீர்ப்பாயத்தில் ஆஜராவதற்கு வருகிற **22.10.2026**-ம் தேதிமன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே வருகிற **22.10.2026** அன்று மேற்படி தீர்ப்பாயத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை எதும் இருப்பின் தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் அன்றைய தினம் சமூகம் தீர்ப்பாயத்தினால் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
V. சுகுமார்,
B. நாராயண கடலை முத்து,
K. பொன்மாறன்,
வழக்கறிஞர்கள்,
க.எண்.B, கீழ்தளம், பொன்மணி கார்டன், உத்தங்குடி, மதுரை – 625 107.

NATIONAL SEEDS CORPORATION LIMITED(NSC)
(A GOVERNMENT OF INDIA UNDERTAKING)
22-C, SIDCO (N), INDL. Estate, Ambattur, Chennai - 600 050.
PH: 044-2625 6192, 2624 2363. Email ID - rm.chennai@indiaseeds.com
No: 4 / OS / PRODN / NSC-CHN / 2026-2027 / 7 Date: 09.10.2026
NOTICE INVITING TENDER
(I). e-Tenders are invited from the reputed Seed Producer / Supplier for Supply of Paddy, Fodder Seeds, Pulses and Oilseeds (e-tender ID - **No: 4 / OS / PRODN / NSC-CHN / 2026-2027 / 7**)
(II). Due date and time of Tender bid submission for supply is **16.10.2026 up to 14.00 Hrs.**
For detailed information log on to the website **https://indiaseeds.enivida.com** and **www.indiaseeds.com**
REGIONAL MANAGER

பஞ்சாப் நேஷனல் வங்கி (The name you can BANK upon!)
சொத்து மீட்பு மேலாண்மை கிளை (ARMB), வட்டார அலுவலகம், திருச்சி, தஞ்சாவூர் சாலை, கலைஞர் நகர், திருச்சி-620014. தொ.பே.: 0431-2521163, மின்னஞ்சல்: cs8327@pnb.bank.in
திருத்தம்
M/s. அருணாச்சலா & கோ.-இன் அசையாச் சொத்து விற்பனைக்காக **08.10.2026** அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) மற்றும் தினமணி (தமிழ்) மதுரை பதிப்பில் பிரசுரிக்கப்பட்ட மின் ஏல விற்பனை தொடர்பான அறிவிப்பு.
மேலே குறிப்பிடப்பட்ட பிரசுரிக்கப்பட்டதை பொறுத்தவரை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள **மின் ஏல தேதியினை** 24.10.2026 பதிலாக **27.10.2026** என்று திருத்தி வாசிக்கவும்.
மற்ற விவரங்கள் மற்றும் ஏனைய நிபந்தனைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை.
நாள் : 09.10.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம்: திருச்சி பஞ்சாப் நேஷனல் வங்கி, ARMB, திருச்சி

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
அலுவலக தொலைபேசி எண். 0452-2344360
ந.க.எண். 2956/2014/இ2 நாள். 09.10.2026
பொது ஏலம் / டெண்டர் அறிவிப்பு
மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்காணும் விவரப்படி உள்ள இனங்களுக்கு, மறு பொது ஏலம் / டெண்டரானது இத்திருக்கோயிலில் உள்ள பழைய திருக்கல்யாண மண்டபத்தில் வைத்து 22.10.2026-ந் தேதி நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது. விபரம் 1) எழுகடல் வணிகவளாகத்தில் காலியாக உள்ள 26 கடைகள் தரை தளம் கடை எண். எஸ். 6, முதல் தளம் எ70, எ71, இரண்டாம் தளம் எ33, எ36, எ53, எ54, எ55, எ77, பி34, பி38, பி39, பி40, பி41, பி43, பி47 மூன்றாம் தளம் எ18, எ20, எ59, எ81, எ82, எ83, 84, பி49, பி60, பி63 ஆகிய இனங்கள் மற்றும் 2) குலமங்கலம் மெயின் ரோடு, எஸ்.ஆலங்குளத்தில் உள்ள 22760.47 சதுரடி பரப்பளவு கொண்ட காலி மனை, 3) கீழ ஆவணி மூல வீதியில் 206 சதுரடி கொண்ட கட்டிட வணிகம் மற்றும் 4) கீழ மாசி வீதியில் 1326 சதுரடி பரப்பளவு கொண்டு கட்டிட வணிகம் ஏலம் / டெண்டர் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில், நேரில் கேட்டும் அறிவிப்பு தொடர்பாக விரிவான விவரங்களை பெற்றும் தெரிந்து கொள்ளலாம்.
(மு.மி) **க.செல்லத்துரை**
இணை ஆணையர் / செயல் அலுவலர்
வெ.ஆ.எண். 208/செமதொஅ/மதுரை நாள் : 09.10.2026

CHANGE OF NAME
I, RAJENDIRAN S/o. Chinnasami, Date of Birth 13.03.1966, Residing at Old No. 29, Kalavaipottal, Now at New No. 35/2, Vathiyalingapuram 2nd Street, Karupparkovil Backside, Karaikudi, Sivagangai District, Pin - 630 001, Tamilnadu, shall henceforth be known as **RAJENDRAN S/o. Chinnasamy.**
RAJENDIRAN
S/o. Chinnasami
Place : Karaikudi,
Date : 09.10.2026

CHANGE OF NAME
I, D POORNACHANDRAN, S/o. M.DEVENDRAN, Date of Birth 05.06.1985, residing at Door No: 4/365, Konkarathi, Kandaramanickam (Post), Thiruppathur Taluk, Sivaganga District, Pin - 630 204, TAMILNADU, INDIA Shall henceforth be Known as
POORANACHANDRAN
D POORNACHANDRAN
Date: 02.10.2026
Place: THIRUPPATHUR

JM Financial
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com
அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை - IV-A பிணைய நலன்(அமலாக்க)2002 இன் விதிகள், விதி 9(1) (விதி 8(6) காண்க),
கடனீட்டு சொத்துக்கள் சொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பிணைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை மின்னணு ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு
இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (முதுகீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்சியாக JMFARC-விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) **EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust** ("பிணையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திருப்பி பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

ஏ எண்	கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன் / மொத்த நிலுவைத் தொகை
1.	("கடன்தாரர்") 1. திருமதி தமிழ்செல்வி R. C/o திரு ராக்குநாச்சியார் ("இணை கடன்தாரர் 1") 2. திரு பாண்டியராஜன் G, C/O திரு கோபாலன் இருவாரின் வசிப்பிடம் 793 மாங்குளம் கீழக்கொம்புகாரனேந்தல், மாளாமதுரை, சிவகங்கை, தமிழ்நாடு, 630606	சிவகங்கை பதிவு மாவட்டம், மாளாமதுரை சார்-பதிவாளர் அலுவலத்திற்குட்பட்ட சிவகங்கை மாவட்டம், மாளாமதுரை வட்டம், கீழக்கொம்புனேந்தல் கிராமம், கதவு எண் 879-ல் பட்டா எண் 373-ன் படி, சர்வே எண் 244/1-ல் அடங்கிய 3270 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் பொது பாதையுடன் கூடிய கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.4,71,000/- ரூ.47,100/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SESMMKL0411230 / 700006847918 14.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.7,84,668/- மேலும் 15.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற.

விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: அஜித்குமார் 8190005434, செந்தில்குமார்.ஆர் 9524547033, சிவநேசன் 9790397167 & பிரசாந்த் மொண்டே - 022-62241676
கடன் வழங்கியவரான வங்கிக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்கள்: ஏதும் இல்லை
மின் ஏலத் தேதி & நேரம்: 12.11.2026 நேரம்: காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் - 19.10.2026 முதல் 04.11.2026 வரை - காலை10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை
EMD உடன் ஆன்லைன் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி: 11.11.2026
விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No. 18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 09.10.2026 அல்லது அதற்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.
விற்பனை பற்றிய விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளை பின்வரும் வலைத்தளங்களில் காணவும். https://www.jmfinancialarc.com/Home/RetailAssets & https://www.bankeauctions.com.
தேதி: 10.10.2026 ஒப்பம்/அதிகாரபூர்வ அதிகாரி
இடம்: மும்பை JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

JM Financial
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com
அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை - IV-A பிணைய நலன்(அமலாக்க)2002 இன் விதிகள், விதி 9(1) (விதி 8(6) காண்க),
கடனீட்டு சொத்துக்கள் சொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பிணைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை மின்னணு ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு
இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (முதுகீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்சியாக JMFARC-விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) **EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust** ("பிணையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திருப்பி பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

ஏ எண்	கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன் / மொத்த நிலுவைத் தொகை
1.	கடன்தாரர் 1. திரு குருவாபூரப்பன் C C/o திரு சிதம்பரம் இணை கடன்தாரர் : 2. திருமதி சாந்தி G, C/o திரு குருவாபூரப்பன் இருவரும் வசித்து வரும் இடம் கதவு எண்:308/305 காளியம்மன் கோவில் தெரு பெரியகுளம், மு